**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.219/2025**
**Sessions :**
**Deposition of Witness for : PW1 , LW 1**

| | |
|---|---|
| Name | : திருமதி.சக்திவேல் |
| Father's/Husband Name | : திரு.மணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 20th day of July, 2026**

( எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

**<u>முதல் விசாரணை</u>:-**

1. நான் தற்போது நெசப்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். நீதிமன்ற ஆஜர் எதிரி கலா எனது சித்தி ஆவார். மேற்படி ஆஜர் எதிரியுடன் நான் சமாதானம் ஆகிவிட்டதால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

2. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஏற்பட்ட சண்டையில் எனது அம்மாவுக்கு காயம் ஏற்பட்டது. கும்பலாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று தெரியாது.

3. என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு

தெரியாது. **(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

4 **(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க வேண்டுகோள் விடுக்க, அதை ஏற்றுக்கொள்ளப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

5. கடந்த 17.5.2024 அன்று காலை 10.30 மணிக்கு எங்கள் வீட்டு பக்கத்தில் உள்ள பொது பாதையில் மண்ணை கொட்டி இருந்ததால் தகராறு ஏற்பட்டிருந்தது. அப்போது இவ்வழக்கின் எதிரி கலா என்னையும், எனது அம்மாவையும் ஆபாசமாக திட்டினார்கள் என்றும் எனது அம்மாவை இரும்பு ராடு கொண்டு தலையில் அடித்தார் என்றும் அம்மாவிற்கு தலையில் ரத்தம் வந்தது என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு எதிரி எனது சித்தி என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை... இல்லை**

**மறு விசாரணை....** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.219/2025**
**Sessions :**
**Deposition of Witness for : PW2 , LW 2**

| | |
|---|---|
| Name | : திருமதி.மல்லிகா |
| Father's/Husband Name | : திரு.மணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 20th day of July, 2026**

( எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

**<u>முதல் விசாரணை</u>:-**

1. நான் தற்போது நெசப்பாக்கம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். நீதிமன்ற ஆஜர் எதிரி கலா எனது ஓரவுத்தி ஆவார். மேற்படி ஆஜர் எதிரியுடன் நான் சமாதானம் ஆகிவிட்டதால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

2. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஏற்பட்ட சண்டையில் எனக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. கும்பலாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**3. (அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க வேண்டுகோள் விடுக்க, அதை ஏற்றுக்கொள்ளப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என**

**அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

4. கடந்த 17.5.2024 அன்று காலை 10.30 மணிக்கு எங்கள் வீட்டு பக்கத்தில் உள்ள பொது பாதையில் மண்ணை கொட்டி இருந்ததால் தகராறு ஏற்பட்டிருந்தது. அப்போது இவ்வழக்கின் எதிரி கலா என்னையும், எனது மகனையும் ஆபாசமாக திட்டினார்கள் என்றும் என்னை இரும்பு ராடு கொண்டு தலையில் அடித்தார் என்றும் அதனால் எனக்கு தலையில் ரத்தம் வந்தது என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு எதிரி எனது ஓரவுத்தி என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை... இல்லை**

**மறு விசாரணை....** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.